களில் 3,64,388 கூப்பன்களுக்கு ரூ. 10.52 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ. 17.76 இலட்சம் மதிப்புக்கான 17,429 கூப்பன்களுக்கு மட்டுமே விவசாயிகளிடமிருந்து குறித்த கால வரைக்குள் (1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ஆம் நாளுக்குள்) கூப்பன்கள் பெறப்படாத காரணத்தால் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ளது. எனினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு குறுவை 1985 பருவத்தில் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ள கூப்பன்களுக்கு சம்பந்தப்பட்ட விவசாயிகளும் பாதிக்கப்படாது உரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் 1985 குறுவைப் பருவ உற்பத்தி ஊக்கத் திட்டக் கூப்பன்கள் செல்லுபடியாகக் கூடிய காலத்தை நீட்டித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தலைவர் அவர்களே, 'நடந்தாய் வாழி காவேரி' என்று சொல்கிற காவேரிப் படுகையில் காதல் கொண்டிருக்கிற நம்முடைய வேளாண்மையாளர்கள் மற்றும் அவர்கள் மீது காதல் கொண்டிருக்கிற நம்முடைய தாளாண்மை கொண்ட அமைச்சர் பெருந்தகை, வாளாக இருக்காமல், தூளாக ஒரு ஆணை பிறப்பிப்பார்களா ? உரத்தின் கூப்பன்கள் செல்லுபடியாகின்ற வகையில் ஆணை பிறப்பிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய சம்பா சாகுபடியாளர்கள் மீது காட்டுகிற அந்த காதல் உணர்வை குறுவை சாகுபடியாளர்கள் மீதும் காட்ட வேண்டும். குறுவை என்பதே குறுகியது என்று பொருள். ஆகவே குறுகி கிடக்கிற தஞ்சைத் திருநகர வேளாண் பெருங்குடி மக்களுக்கு ரூ. 17.76 இலட்சம் மதிப்பிற்கு கூப்பன்கள் தருவதில் தடையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தடைகளை நீக்கி அவை செல்லுபடியாகிற அளவிற்கு செய்ய வேண்டும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பாரதியினுடைய கவிதை நடை கருத்தை ஏற்று, இந்தக் கூப்பன்களை வழங்குவதற்கு நாம் 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாள் வரைக்கும் கால நீட்டிப்பு தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(28) சென்னை, கொசப்பேட்டை வி. வி. கோயில் தெருவில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. ஜே. முகம்மது கனி : தலைவர் அவர்களே, 'சென்னையில் பல பகுதிகளில் குடிநீர் வேகம் குறைந்து வருவதால் பொது மக்களுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் குடிநீர் கிடைப்பதில்லை. எனவே கொசப்பேட்டை மற்றும் அதைச் சார்ந்

கவன ஈர்ப்புகள்

[திரு ஜே. முகம்மது கனி]

துள்ள பல வீதிகளுக்கும் குறிப்பாக வி. வி. கோயில் தெருவில் குடிநீர் வசதி செய்து தரவேண்டியது குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொசப்பேட்டை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் 72 பொதுக் குழாய்களும் குடிப்பது தவிர மற்ற தேவைகளுக்கு உதவ 19 ஆழ்குழாய் கிணறுகளும் "இந்தியா மார்க்-2" 21 குழாய் கிணறுகளும் இதைத் தவிர 5 குடிநீர் தொட்டிகள் அமைத்து அவற்றிற்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. இப் பகுதியிலுள்ள வி. வி. கோவில் தெருவில் சற்று குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை நிவர்த்திக்க இத் தெருவிலுள்ள குடிநீர் குழாய்களையும் மற்றும் செங்கல் சூளை தெருவிலுள்ள குடிநீர் குழாய்களையும் பரிசோதித்து அவைகள் சுத்தம் செய்யப்பட்டன. இதனால் வி. வி. கோயில் தெருவிலுள்ள வீடுகளுக்கு அதிகாலையில் குடிநீர் கிடைத்து வருகிறது. மற்றும் இப் பகுதியிலுள்ள நாராயண மேஸ்திரி தெருவிலுள்ள குடிநீர் குழாய்களும் அமைந்தராயன் தெருவிலுள்ள குடிநீர் குழாய்களும் மேலும் கீழே இறக்கி பதிக்கப்பட்டன. நாராயண மேஸ்திரி தெரு மற்றொரு பகுதிக்கும் செங்கற்சூளை 5ஆவது வீதிக்கும், திரு. வி. க. தெருவிற்கும் மாற்று இணைப்பு குழாய்கள் செங்கற்சூளை சாலையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் சி.ஆர். கார்டன், எதிராஜ் கார்டன், ராமானுஜ கார்டன் ஆகிய பகுதிகளுக்கு புதிதாக துணைக் குழாய் அமைக்கும் திட்டம் ரூ. 1.15 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் இப் பகுதியில் வி. வி. கோயில் தெரு போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் முறை மேம்பாடு அடையும்.

மேலும் மேற்கூறிய பகுதிகளில் எல்லா வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் உள்ளன.

திரு. ஜே. முகம்மது கனி : தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் 24 மணி நேரமும் வேகம் குறையாமல் குடி தண்ணீர் வழங்குவதற்கும், சென்னை கொசப் பேட்டையில் உள்ள வி.வி. கோயில் தெரு, நாராயண மேஸ்திரி தெரு போன்ற தெருக்களில் குடி தண்ணீர் வழங்கவும் அரசு ரூ. 1.15 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரித்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வருமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிய துணைக் குழாய் அமைக்கக்கூடிய திட்டம் ரூ. 1.15 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு அதை செயல்படுத்தும்.

(29) ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் தட்டுப்பாடு.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, '' ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் வாரம் ஒருமுறை குடிநீர் வழங்கப்படுவதால் அப் பகுதி வாழ் மக்களுக்கு சரிவர குடிநீர் கிடைக்காத நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1. ஆத்தூர் நகரில் உள்ள இரண்டு நீரேற்று நிலையங்கள் மூலம் சாதாரண நாட்களில் 15,00,000 லிட்டர்கள் குடிநீர் விநியோகம் செய்யலாம். ஆனால் தற்போது வறட்சியால் 3,96,000 லிட்டர்தான் குடிநீர் கிடைக்கிறது. இது தவிர 36 ஆழ்குழாய் கிணறுகள் மூலமும், 30 திறந்த வெளிக் கிணறுகள் மூலமும் ஒரு நாளைக்கு 3,16,800 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. இவற்றின் மூலம் நகரில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு மொத்தம் 14.78 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 75 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும்.

2. இந்த குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் முதல் தற்போது நான்கு தனியார் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

3. கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சில நகராட்சிகளில் ஆத்தூர் நகராட்சியும் ஒன்று. நகராட்சிப் பகுதிகளில் குழாய் கிணறுகள் தோண்டுவதற்காக அரசாணை நிலை எண் 562, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் ரூ. 80 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர் நகராட்சி